நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 499/2024

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**( புகார்தாரர் தரப்பு )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கல்யாணி |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | 2/62 பிள்ளையா்ர கோவில் தெரு ஆஸ்பிட்டல் காலணி |
| வட்டம் | : | மேட்டு்ர |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 44 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 12–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.45PM)

1. நான் தற்போது காசோலை மோசடி வழக்கு தொடர்ந்து உள்ளேன். கார்த்திகேயன் மீது வழக்கு தொடர்ந்து உள்ளேன். கார்த்திகேயனின் மாமா சங்கரும் எனது கணவரும் ஒன்றாக படித்தவர்கள் அதன் அடிப்படையில் எனக்கு தெரியும். இந்த வழக்கை ரூபாய் 49 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு தாக்கல்

செய்துள்ளோம்.கார்த்திகேயன் மேற்படி தொகையை எங்களுக்கு தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் ஆமாம்.

2. எதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாங்கள் அவர்களிடம் வீடு வாங்குவதற்காக பணம் கொடுத்து இருந்தோம் முன்பணம் திருப்பி கொடுக்கவில்லை என்பதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அந்த வீடு நாங்கள் வாங்கி விட்டோம். 90 லட்சத்துக்கு நாங்கள் வீடு வாங்கினோம். முதலில் 15 லட்சம் கொடுத்தோம் என்றால் சரிதான் அதன் பிறகு ஒரு 5 லட்சம் கொடுத்தோம் என்றால் சரிதான் அதன் பிறகு ஒரு இரண்டு லட்சம் கொடுத்தோம் என்றால் சரிதான் மேற்படி தொகைகள் அனைத்தும் வங்கி கணக்கு மூலமாக கொடுத்தேன் என்றால் சரிதான் அதன் பிறகு ரூபாய் 13 லட்சம் ரொக்கமாக கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

3. கார்த்திகேயன் டாட்டா கேப்பிடல் நிறுவனத்தில் வீட்டுக்காக கடன் வாங்கி இருந்தார் அந்த கடனை நாங்கள் ஏற்றுக் கொண்டு கார்த்திகேயன் காசோலை பெற்றுக்கொண்டு வீட்டை நாங்கள் வாங்கினோம். கார்த்திகேயனிடம் 90 லட்சத்துக்கு தான் வீடு வாங்கினோம் ஆனால் எங்களது வேறு தேவைகளுக்காக டாட்டா கேப்ிடல் நிறுவனத்தில் ஒரு கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் கடனாக வாங்கி இருந்தோம். அந்த தொகை கார்த்திகேயன் பெயரில் தான் காசோலையாக கொடுக்கப்பட்டது. அதில் எங்களுக்கு இன்னும் தொகை கார்த்திகேயன் கொடுக்க வேண்டியுள்ளது.

4. என்னிடம் காட்டப்படுவது பு.சா.ஆ. 12 கிரைய ஆவணம் தான் நாங்கள் கிரயம் வாங்கியது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் எங்களது நிறுவனத்தின் பெயரில் வாங்கவில்லை என்றாலும் எனது பெயரிலும் எனது கணவர் பெயரிலும் சேர்ந்து வாங்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது கார்த்திகேயன் எங்களிடம் கொடுத்த பு.சா.ஆ.1 காசோலை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் காசோலையில் தொகையும் மற்ற விவரங்களும் வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காசோலையில் எங்களது நிறுவனத்தின் முழு பெயர் இல்லை என்றால் சரியல்ல சரியாகத்தான் உள்ளது. மேற்படி காசோலையில்

தனிநபர் நிறுவனமா லிமிடெட் கம்பெனியா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சட்ட அறிவிப்பில் Properitor என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. M.A ட்ரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் நிறுவனர் நான் தான் என்றால் சரிதான். எனது கணவரும் நிறுவனத்தை கவனித்து வருகிறார். மேற்படி நிறுவனத்தின் சட்டப்பூர்வ உரிமையாளர் நான் என்பதால் அதில் உரிமை இல்லாத எனது கணவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கூடாது என்றால் சரியல்ல. கார்த்திகேயன் காசோலையை என்ன தேதியில் எனக்கு கொடுத்தார் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நினைவில் இல்லை. காசோலையை 23.5.2024 ஆம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தேன்.

6. எனது புகாரில் 02.01.2024–ஆம்தேதி காசோலையை வசூலுக்காக செலுத்துவதாக எதிரிக்கு தகவல் தெரிவித்துவிட்டு அப்போது வசூலுக்கு செலுத்தாமல் அதன் பின்னிட்டு வசூலுக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் அவ்வாறு புகாரில் குறிப்பிடப்பட்டதாக எனக்கு நினைவில் இல்லை. 02.01.2024–ம் தேதி நான் மிரட்டியதால் எதிரி ரூபாய் 8 லட்சம் எனது வங்கி கணக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல பணம் அனுப்பி வைத்தார் ஆனால் நான் மிரட்டவில்லை. நான் புகாரில் சொன்னவாறு 02.01.2024– தேதியே புகாரை தாக்கல் செய்திருக்கலாம் என்றாலும் எதிரியிடம் பணம் பறிக்க வேண்டி தான் ஐந்து மாதம் கழித்து காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் பணம் கேட்டபோது காத்திருங்கள் பணம் தருகிறேன் என்று தவணை சொல்லி வந்ததால் நாங்கள் காத்திருந்து பார்த்துவிட்டு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தோம்.

7. நாங்கள் வாங்கிய வீட்டின் மாடியில் தான் கார்த்திகேயன் குடியிருந்தார் என்றால் சரியல்ல நாங்கள் வீடு வாங்கும் போது கார்த்திகேயன் அங்கு குடியிருக்க வில்லை வேறு வீட்டுக்கு குடி பெயர்ந்து சென்று விட்டார். வாங்குவதற்கு முன்னால் ஒரு வருடமாக அந்த வீடு காலியாக தான் இருந்தது. எனக்கு அந்த வீட்டின் முகவரி தெரியாது எனது கணவருக்கு தான் தெரியும். அவர் அந்த வீட்டில் குடியிருந்ததால் தான் அந்த வீட்டின் முகவரிக்கு சட்ட அறிவிப்பு

அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.8 ஆக ஆக குறியீடு செய்யப்பட்ட விருப்பப்பட்ட அஞ்சல் உறை மேற்படி நாங்கள் வாங்கிய வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியில்ல. நாங்கள் அந்த முகவரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை.

8. காசோலையை 23.5.2024 ஆம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தோம். 27.5.2024 ஆம் தேதி வசூலாகாமல் திருப்பப்பட்டது. 24.6.2024 ஆம் தேதி சட்ட அறிவிப்பு கொடுத்து விட்டோம். இந்த வழக்கு எந்த தேதியில் தாக்கல் செய்தோம் என்று எனக்கு நினைவில் இல்லை.

9. இந்த சொத்து சம்பந்தமாக கடந்த 02.06.2023–ஆம் தேதி ஒப்பந்தம் செய்துள்ளோம். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ. 11 ஆவணம் தான் மேற்படி ஏற்படுத்திக் கொண்ட விற்பனை ஒப்பந்தம் என்றால் சரிதான். மேற்படி விற்பனை ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் போது காசோலை எனக்கு கொடுக்கவில்லை. அதன் பிறகு தான் காசோலை கொடுத்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.10 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**